# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 3

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சண்முக கிருஷ்ணா என்ற கிஷோர் |
| Father's Name | : | K. சிவஞானராஜா |
| Village | : | கிருஷ்ணன்கோவில் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | BC |
| Calling | : | Student |
| Religion | : | Hindu |
| Age | : | 19 |
| Date | : | 07.06.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.06.2024

( எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

07.06.2024

முதல் விசாரணை :-

நான் தற்போது கிருஷ்ணன் கோவில் தெப்பகுளம் அருகில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ காமராஜ் கல்லூரியில் படித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன மனோஜ் ஐ எனக்கு தெரியும். அவர் என்னுடைய நண்பர். ஆஜர் எதிரி பேச்சியை தெரியும். SSD பாத்திரக் கடையில் நானும் பேச்சியும் சேர்ந்து வேலை பார்த்தோம். அ.சா. 2 அரவிந்த் யை தெரியும். அவரும் எங்களுடன் வேலை பார்த்தார். 2022 ஆம் வருடம் தீபாவளியன்று மனோஜ் பேச்சியை குடிக்காதே என அட்வைஸ் செய்தான் அதற்கு பேச்சி உனக்கு

என்னபிரச்சினை நான் அப்படிதான் செய்வேன் என தகராறு வந்து மாறி மாறி அடித்துக் கொண்டார்கள். அதற்கு பிறகு மனோஜ் ஐ ரோட்டில் பார்க்கும்போது பேச்சி ஜாடை மாடையாக பேசுவதும், முரைத்து பார்ப்பதும் கெட்ட வார்த்தைகளில் பேசி திட்டுவதுமாக இருந்தார். 25.08.2023 அன்று மனோஜ்யும், அரவிந்த் யும் SSD பாத்திரக் கடைக்கு எதிராக மாலை 5.30 மணிக்கு டீ குடித்து கொண்டிருந்தார்கள். பேச்சி வந்து மனோஜிடம் ஏன் இங்கே இருக்க என கூறி தகராறு செய்தார் என தெரிய வந்தது. 28.08.2023 மாலை 6.00 மணிக்கு கல்லூரி முடிந்து பாத்திரக் கடைக்கு வேலைக்கு சென்றேன். 7.15 மணிக்கு நானும், பேச்சியும் பஜாருக்கு Dio பைக்கில் சென்றோம். திரும்ப இரவு 8.00 மணியளவில் வந்து கொண்டிருந்த போது வடக்கு ராஜ வீதியில் மனோஜ் ம் அவருடைய அண்ணன் ராஜகோபாலும் சத்தமாக பேசிக் கொண்டிருந்தார்கள். நானும், பேச்சியும் கடைக்கு சென்றோம். பச்சை கலர் கைப் பிடிக் கொண்ட கத்தியையும், ஸ்கூரு டிரைவரையும் கடையில் இருந்து மனோஜ் கொல்லாமல் விட மாட்டேன் என்று வெளியே வந்தார். விபரீதம் நடக்க போகுது என பின்னாலே போனேன். கத்தியை தலையை நோக்கி வீசினார். மனோஜ் நகந்து கத்தி கீழே விழுந்தது. இடுப்பில் இருந்த ஸ்கூரு டிரைவரை எடுத்து பேச்சி மனோஜ் ஐ குத்தினார். உடனே மனோஜ் கிழே விழுந்து விட்டான். கீழே இருந்த கத்தியை எடுத்து பேச்சியின் காலை வெட்டினான். மீண்டும் ஆத்திரம் அடைந்து பேச்சி ஸ்கூரு டிரைவரால் மனோஜ் ஐ சரமாரியாக குத்தினான். கழுத்திலும், நெஞ்சிலும் குத்தினான். நானும், அரவிந்த் ம், ராஜகோபாலும் சத்தம் போட்டோம். சத்தம் போட்டவுடன் பேச்சி மேற்கே பார்த்து கத்தியையும், ஸ்கூரு டிரைவரையும் எடுத்துக் கொண்டு பைக்கில் போய்விட்டான். மனோஜ் ஐ அவருடைய அண்ணன் ராஜகோபலும் அஜீஸ் ம் Suzuki பைக்கில் சத்தியம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். மருத்துவமனைக்கு கொண்டு சென்று 5 நிமிடத்திலேயே மனோஜ் இறந்து விட்டார் என தகவல் தெரிந்தது. போலீசார் விசாரித்தார்கள். சம்பவத்திற்கு பயன்படுத்திய ஸ்கூரு டிரைவரை மற்றும் கத்தியை

என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 மற்றும் 2 ஸ்கூரு டிரைவரை மற்றும் கத்திதான். எதிரி தப்பிச் சென்ற பைக்கை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும்.

குறுக்கு விசாரணை(எதிரிதரப்பில்)-

SSD பாத்திரக் கடை சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திலிருந்து எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் மேற்கு திசையில் 100 மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு சம்பவ சமயத்தில் எதிரி பேச்சி மேற்கு திசையில் இருந்துதான் வந்தாரா என்றால் தெற்கு திசையில் இருந்து வந்தார். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு தெற்கு திசையில் தான் SSD பாத்திரக் கடை இல்லை என்றால் சரியல்ல. தெற்கு திசையில் தான் உள்ளது. எனக்கு சம்பவ இடமே தெரியாது என்றாலும் அதனால்தான் முன்னுக்குபின் முரணாக மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், சாட்சி அரவிந்த்யும் தான் மனோஜ் மரணத்திற்கு காரணம் என அனுமானித்து எங்களை இரண்டு நாள்கள் போலீசார் காவலில் விசாரித்தார்கள் என்றால் காவலில் வைத்து விசாரித்தார்கள். நாங்கள் தான் காரணம் என்பதற்காக அல்ல. நான் வழக்கறிஞரை வைத்து காவல் நிலையத்திலிருந்து மீட்கப்பட்டேன் என்றால் சரிதான். 2022 ஆம் வருடம் தீபாவளி அன்று நடந்ததாக சொல்லும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 25.08.2023 அன்று டீ கடையில் வைத்து நடந்ததாக சொல்லிய சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அரவிந்த் என்பவர் SSD பாத்திரக் கடையில் வேலை செய்யும்போது கையாடல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் அப்படி எதுவும் நடக்க வில்லை. கையாடல் சம்பந்தமாக எதிரிக்கும் அரவிந்த் க்கும் சின்ன வாய் தகராறு நடந்தது என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அப்படி எதுவும் நடக்க வில்லை. இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரிந்திருந்தும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக

சொல்லும் கால கட்டத்தில் நான் என்ன படித்து கொண்டிருந்தேன் என்றால் கல்லூரியில் மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரி சென்றுவிட்டு சுமார் எத்தனை மணிக்கு திரும்பி வந்தேன் என்றால் 6.00 மணிக்கு திரும்பி வந்தேன். SSD பாத்திரக் கடையின் உரிமையாளர் அன்றைய தினம் கடையில் தான் இருந்தாரா என்றால் இருந்தார். நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், அன்றைய கல்லூரியே கிடையாது என்றாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை என்றாலும் சரியல்ல. கல்லூரி இருந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து சத்தியம் மருத்துவமனைக்கு வடசேரி காவல் நிலையம் வழியாக செல்வதுதான் குறுகிய வழி என்றால் சரிதான். இறந்த நபரை தூக்குவதற்கோ, மருத்துவமனைக்கு எடுத்து செல்வதற்கோ நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் எதையும் பார்க்கவில்லை என்றாலும் அப்படி பார்த்திருந்தால் அவரை தூக்கி மருத்துவமனைக்கு செல்ல முயற்சி செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் பார்த்தேன். காவல் நிலையத்திலிருந்து சம்பவ நடந்தாக சொல்லப்படும் கூப்பிடும் தொலைவில் தான் உள்ளது என்றால் இல்லை கொஞ்சம் தள்ளிதான் உள்ளது. 50 மீட்டர் தொலைவில் இருக்குமா என்றால் 100 மீட்டர் தொலைவில் இருக்கும். சம்பவ நடந்த பிறகு காவல் நிலையத்தில் எந்த தகவலும் கொடுக்க முயற்சிக்க வில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் எந்த சம்பவமும் பார்க்காததால் தான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றாலும் எந்த தகவலும் கொடுக்கவிலை என்றாலும் சரியல்ல. இறந்து போன மனோஜ்க்கு குடிபழக்கமும், கஞ்சா அடிக்கும் பழக்கமும் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு குடிபழக்கம் கிடையாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து SSD பாத்திரக் கடை எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. 100 மீட்டர் இருக்கலாம். பேச்சிக்கும், மனோஜ் க்கும் ஏதோ நடக்க போகுது என்று எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் பேச்சி கடையில் வந்து கத்தியையும் மற்றும் ஸ்கூரு டிரைவரையும் எடுக்க

வந்த போது எனக்கு தெரிய வந்தது. SSD பாத்திரக் கடையிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ள சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சத்தமாக கத்தியிருந்தால் கேட்டிருக்கும் என்றால் சில சமயம் கேட்கும் சில சமயம் கேட்காது. SSD பாத்திரக் கடையிலிருந்து மனோஜ் ஐ காப்பாற்றும் வகையில் சத்தமாக கத்தவோ, சொல்லவோ இல்லை என்றால் சரிதான். இப்படி ஒரு சம்பவமே நடைபெறாததால் தான் அவ்வாறு மனோஜ் காப்பாற்ற நான் முயற்சி செய்யவில்லை என்றாலும் அப்படி சம்பவம் நடந்திருந்தால் நான் காப்பற்ற முயற்ச்சி செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலும், எதிரியையும், மனோஜுயும் பிடிப்பதற்கோ தடுப்பதற்கோ எந்த முயற்சியும் எடுக்க வில்லை என்றால் சரிதான். மனோஜ் யை காப்பாற்றுவதற்காக ஏன் சத்தம் போடவில்லை என்றால் பேச்சியின் பின்னாலேயே விபரீதம் நடக்க போகிறது என போனேன். உண்மையிலேயே சம்பவம் எதுவும் நடந்திருந்தால், மனோஜ் காப்பற்ற முயற்சி செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்காததால் தான் நான் அவ்வாறு முயற்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல எதிரிக்கு மனோஜினால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. ஆனது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எந்த வாகனத்தில் மனோஜ் ஐ கூட்டிச் சென்றார்கள் என போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றாலும் சரியல்ல சொன்னேன். நான் அவ்வாறு போலீஸ் விசாரணையில் சொன்னதாக முதல் முறையாக தற்போது பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபரை அ.சா. 1 ராஜகோபால் Suzuki வண்டியில் அஜிஸ் என்ற நபருடன் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார் என்று முதல் முறையாக தற்போது தான் சொல்கிறேன் என்றாலும் போலீஸ் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் சொல்வது போல சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்தில் ரத்தம் பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மழை பெய்தது அதனால் என்ன ஆனாது என்றால் எதுவும் ஆகவில்லை. நான் சொன்னது போல எந்த

சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் நான் அ.சா.1 க்கு வேண்டிய நபர் என்பதால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 2 அரவிந்த் யும் வேண்டிய நபர் என்றால் சரிதான். எதிரி மீது உள்ள பகையினால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.